**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar)
Preliminary Register) CC.574/2022
Sessions)

Deposition of witness for ( Prosecution D.W.2
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | கண்ணன் | -- | |
| Father's Name | கோபால் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 59/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 2nd day of Febraury 2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை–**

நான் தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் தலைமை அலுவலகத்தில் ஆட்சி துறை உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது போக்குவரத்து கழகத்தில் உள்ள தொழிலாளர் சங்கத்தின் புகாரின் அடிப்படையில் தொழிலக பாதுகாப்பு துணை இயக்குநர் எங்களது பணிமனையை ஆய்வு செய்தார். அந்த ஆய்வின் போது போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கு விடுப்பு சம்பந்தப்பட்ட உரிமைகளையும் அதன் பணபலன்களையும் வழங்கும் படி கூறினார்கள். அதன் அடிப்படையில் எங்கள் நிர்வாகம் சர்பாக 28.02.2023ம் தேதியில் புகாரில் கண்டுள்ளபடி விடுப்பை சரி செய்துவிட்டோம் என்றும் அதனால் மேல் நடவடிக்கை தேவையில்லை என்றும் கடிதம் கொடுத்துவிட்டோம். மேற்படி கடிதம் எ.சா.ஆ.2 ஆகும். அதன் பின்னர் தொழிலாளர்களுக்கு விடுப்பு சம்பந்தமாக எந்த பிரச்சனையும் இல்லை.

**குறுக்கு விசாரணை –**

நான் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ.2 கடிதம் எங்கள் அலுவலகத்தில் இருந்து தொழிலக பாதுகாப்பு இயக்குநருக்கு அனுப்பபட்டது. மேற்படி கடிதத்திற்கு தொழிலக பாதுகாப்பு இயக்குநர் அவர்கள் பதில் கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. எதிரி மீது என்ன வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் இரத்து செய்யப்பட்ட வார ஓய்வை சரி செய்து கொடுக்க வேண்டும் என்று இருந்தது. எதிரி மீது சட்டப்படியான நடவடிக்கை தான் எடுக்கப்பட்டுள்ளது என்பதால் அதனை வாபஸ் பெற முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்கு தேவையில்லாத சாட்சி என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 2nd day of Febraury 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**